# உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு

**பரிசுத்த ஆவியானவர் நம்மை எவ்வாறு புதிதாக்குகிறார் என்பதை சிறுவர்களுக்கு போதிக்கவும்.**

**ஜெபம்:** "கர்த்தாவே, நீர் இயேசுவுக்குள் அவர்களை மரித்தோரிடத்தில் இருந்து எழுப்பி, அவரோடு மகிமையில் நித்தியமாக வாழ வைப்பீர் என்ற உறுதியை பிள்ளைகளுக்கு அளிப்பீராக."

பின்வரும் கல்வி - நடவடிக்கைகளில் எதையாகிலும் தெரிந்து கொள்க.

தேவன் எசேக்கியலுக்கு அளித்த உலர்ந்த எலும்புகளால் நிறைந்த பள்ளத்தாக்கைப் பற்றிய தரிசனத்தை ஒரு பெரிய குழந்தையோ ஆசிரியரோ வாசிக்கட்டும் அல்லது மனப்பாடமாகக் கூறட்டும் (எசே. 37:1-14). எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலமாக, தேவன் இஸ்ரவேல் மக்களை காப்பார் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு எவ்விதம் கொடுத்தார் என்பதைக் கவனிக்குமாறு முதலில் குழந்தைகளைக் கேட்டுக் கொள்ளுங்கள்.



கதையை கூறிய பின், கீழ்க்காணும் **கேள்விகளைக்** கேட்கவும் *(தேவைப்பட்டால் மட்டுமே பதிலைக் கூறுக).*

- எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கை தீர்க்கத்தரிசியிடம் யார் காட்டியது? *(1).*
- எலும்புகளைப் பார்த்து தீர்க்கதரிசனம் உரைத்த போது எசேக்கியேல் என்ன கேட்டார்? *(7)*
- தேவ சுவாசம் எலும்புகளை என்ன செய்ய வைத்தது? *(10).*
- எலும்புகள் எதைக் குறித்தன? *(11. இது அவரது ஜனங்களின் எலும்புகள்)*
- அவர்கள் மறுபடியும் வாழ்வதற்காக தேவன் என்ன கொடுப்பதாக வாக்களித்தார்? *(14).*

**கதையின் பகுதிகளை நாடகமாக்குக**

- ஆராதனை வேளையின் போது நாடகத்தை அரங்கேற்ற சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும்.
- இதை ஆயத்தம் செய்ய பிள்ளைகளோடு நேரத்தை செலவிடவும்.
- எல்லா பகுதியையும் பயன்படுத்தத் தேவை இல்லை.
- இந்தப் பாத்திரங்களை **பெரிய குழந்தைகளோ** பெரியவர்களோ நடிக்கலாம்.

**கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி பிள்ளைகள் பேச வேண்டியதை ஞாபகப்படுத்துபவர்

**தேவ குரல்**

**எசேக்கியேல்**

- சிறு குழந்தைகள் நடிக்க வேண்டிய பாத்திரங்கள்

**எலும்புகள்** தரையில் கண்மூடி படுத்துக் கிடக்கவும்

**காற்று**

**உலர்ந்த எலும்புகளின் தரிசனம்**

**கதை கூறுபவர்:** எசே. 37:1-14 ல் உள்ள தரிசனத்தைக் கூறவும். பின் சொல்ல வேண்டியது, "தேவன் கூறுவதைக் கேளுங்கள்."

**தேவ குரல்:** "எசேக்கியேலே! என் ஜனங்களின் எதிர்காலத்தை உன்னிடம் காட்ட விரும்புகிறேன். எலும்புகளால் நிறைந்த இந்தப் பள்ளத்தாக்கைப் பார். இந்த எலும்புகள் மறுபடியும் உயிர்பெறுமா?"

**எசேக்கியேல்:** "நீர் மட்டுமே அறிவீர், கர்த்தரே"

**தேவ குரல்:** "இந்த எலும்புகளை ஒன்றாக சேர்த்து, அவற்றிற்கு சுவாசம் கொடுப்பேன் என்று அவைகளுக்குக் கூறு!"

**எசேக்கியேல்:** "உலர்ந்த எலும்புகளே! உயிர் பெறுவீர்."

**எலும்புகள்:** சடசடவென சத்தம் எழுப்பி, கண்களை மூடி தரையில் படுத்தவாறே, ஒன்றாக வருதல்.

**எசேக்கியேல்:** "இப்போது உங்களுக்குள் தேவன் தமது ஆவியை ஊதுவார். நீங்கள் உயிர் பெறுவீர்கள்! காற்றே! வீசுவாயாக!"

**காற்று** : எலும்புகளை நோக்கி வேகமாக வீசுதல்.

**எலும்புகள்:** குதித்தெழுந்து வீரர்களைப் போல் அணிவகுத்து,

"கர்த்தர் எங்களுக்கு உயிர் கொடுத்தார்",

"ஒரே, எல்லாம் வல்ல தேவனைத் துதிக்கிறோம்!"

"எல்லாம் வல்லவர் மரித்தோரை எழுப்பி என்றென்றும் மகிமையிலேயே தம்மோடு வாழச் செய்வார்!"

**கதை கூறுபவர்:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்.

இந்த நாடகத்தைப் பிள்ளைகள் பெரியோருக்கு நடித்துக் காட்டினால் ஆரம்பத்தில் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**கேள்வி:** எதிர்காலத்தில் நிறைவேறும்படியாக தேவன் அளித்துள்ள வாக்குத்தத்தங்களின் வேறு உதாரணங்கள் யாவை (சிறுவர்கள் அல்லது பெரியவர்கள் உதாரணம் கூறட்டும்).

எலும்பு அல்லது எலும்பு கூட்டின் **படம் வரைக.**

- பெரிய படத்தை துண்டு துண்டாக வெட்டி சிறுவர்களை ஒன்று சேர்க்கும்படி கூறுக.
- பிள்ளைகள் படத்தைப் பார்த்து வரையட்டும்.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவுக.
- வரும் ஆராதனை வேளையில் பெரியவர்களுக்கும், வீட்டிலும் சிறுவர்கள் படத்தைக் காட்டவும்.
- தேவ ஆவி, எந்த மோசமான நிலையில் இருக்கும் மனிதனையும் மாற்ற முடியும் என்பதை எலும்புகள் உணர்த்துகின்றன.
- தேவன் நம்மை மரணத்திற்குப் பின் எழுப்பி என்றென்றும் தம்முடன் மகிமையில் வாழச் செய்வார் என்பதை எலும்புகள் நமக்கு ஞாபகப்படுத்துகின்றன.



- நமக்குரிய இடத்தை எடுத்துக் கொண்டு, நமது பாவத்திற்குரிய தண்டனையை ஏற்றுக் கொண்டு, நமது அவமானத்தை தாங்கிக் கொண்ட இயேசுவின் மூலம் மட்டுமே நாம் நித்திய வாழ்வைப் பெற முடியும். பின் நம்மை அவரோடு கொண்டு செல்ல மரித்தோரில் இருந்து எழுந்தார். நாம் பின் தொடரும் ஒரே வழியை உருவாக்கினார்.

**மனன வசனம்:** 2 நாளா. 7:14.

**வசனம் கூறுதல்:** எரே. 31:33, 34 - இரண்டு சிறுவர்கள் ஒப்புவித்தல்.

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே. உலர்ந்த எலும்புகளை உயிர்பெறச் செய்து மீண்டும் நடக்க வைக்கும் வல்லமை உம் ஒருவருக்கே உண்டு. நாங்கள் மரணம் அடைந்த பின் நீர் எங்களுக்குள் ஜீவனை ஊதுவீர். நாங்கள் பாவத்தினால் ஆவிக்குரிய வகையில் மரித்துப் போய் இருந்தோம். ஆனால் நீரோ என்றென்றும் நிலைத்து நிற்கும் புதிய பரிசுத்த வாழ்வை எங்களுக்குத் தந்தீர்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net